# பதினொன்றாம் திருமுறையில் காரைக்கால் அம்மையார் பாடல்களில் முத்தமிழின் தொன்மைகள்

**க. வடிவேலு**

**முனைவர்பட்ட ஆய்வாளர் (நடனத் துறை)**

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

**ஆய்வுச்சுருக்கம்**

தொன்மை வாய்ந்த தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்று பகுக்கப்பட்டு 'முத்தமிழ்' என வழங்கப்படுகிறது . சிலப்பதிகாரத்தின் நூற் சிறப்புப் பாயிரத்தில் "குடக்கோ முனிசேரன்தண்டாவுரைமுத்தமிழ் "என போற்றப் பெறுகிறது .சைவ சமய பக்தி இலக்கியங்கள் 12 நூல்களாக தொகுக்கப் பெற்று 'பன்னிரு திருமுறைகள்' என்று அழைக்கப்பெறும்.பன்னிருதிருமுறைகளுள் பதினோராவது நூலான பதினொன்றாம் திருமுறை 12 ஆசிரியர்களின் தொகுப்பு நூலாகும்.இந்நூல் சீட்டுக்கவி,பதிகம்,பிள்ளைத்தமிழ், உலா,கலம்பகம்,அந்தாதி, கோவை போன்ற பல பிரபந்த வகையில் அமைந்துள்ள 40 நூல்களின் தொகுப்பாகஅமைந்திருக்கின்றது.இத்திருமுறை பாடல்கள் 'பிரபந்தமாலை', 'பிரபந்தத்திரட்டு' என்றும் வழங்கப்பெறும். கிபி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் இத்திருமுறையில் இரண்டாவது தொகுப்பு நூலாக அமைந்துள்ளது. காரைக்காலம்மையார்

இரண்டு பதிகங்கள், இரட்டை மணி மாலை மற்றும் அற்புதத் திருவந்தாதி என்று நான்கு நூல்களை இயற்றியுள்ளார் . அற்புதத் திருவந்தாதி பாடல்கள் 101, திருஇரட்டை மணிமாலை 20 , மூத்த திருப்பதிகங்கள் 22 பாடல்கள் என இவற்றின் மொத்த எண்ணிக்கை 143 பாடல்கள் ஆகும்.

பதிகம் வகை பாடல்களில் முதலாவதாக இரண்டு பதிகங்கள் இவரால் பாடப்பெற்றவை'மூத்ததிருப்பதிகம்' என்று அழைக்கப்படுகிறது. அந்தாதி மற்றும் இரட்டை மணிமாலை ஆகிய சிற்றிலக்கிய வகைகளுக்கு முன்னோடியாக திகழ்கின்றகாரைக்கால் அம்மையார் ‘தமிழிசையின் தாய் ' எனபோற்றப்பெறும் பெருமை உடையவர் . இவர் இயற்றிய பாடல்கள் நட்டபாடை, இந்தளம் என்னும் இரண்டு பண்களில்இயற்றப்பட்டுள்ளது.நட்டபாடை என்ற பண்தற்காலத்திலும்தேவாரம்,நாதசுரம் மற்றும் கர்நாடக இசைக் கச்சேரிகளில் பெரும்பாலும் முதலாவதாக பாடி இசைக்கப்படுகிறது . இந்தளம்பண் என்ற மாயாமாளவகௌளை ராகத்திலேயேஇசைப்பயிற்சிக்கானஅடிப்படை பயிற்சி பாடங்கள் அமையப்பெற்றுள்ளது. பதிகங்களில் முத்திரையாக தன்னுடைய பெயரையும் பாடப்பெறும் தலத்தையும்குறிப்பிட்டுள்ளார். நான்கு வகை இசைக் கருவிகளின் 17 இசைக் கருவிகளின் பெயர்களை இவர் பதிகங்களில் காணலாம். சிவபெருமானின் ஆடல் வகைகளான திரிபுரதாண்டவம், பாண்டரங்கம் , சம்காரத் தாண்டவம் மற்றும் துணங்கைக் கூத்து பற்றிய குறிப்புகளுடன் காரைக்கால் அம்மையார் பாடல்கள் விளங்குகின்றன. சைவ சமய பக்தி இலக்கியங்களின் இயல்

இசை வடிவங்களுக்கு முன்னோடியாகவும், பல்வேறு ஆடல்வகைகளின் குறிப்புகளுடன் இவர் பாடல்கள் காணப்பெறுகிறது . பதினொன்றாம் திருமுறையில் காரைக்கால் அம்மையார் பாடல்களில் இயல் இசை நாடகம் எனும்முத்தமிழின்தொன்மைகளை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**- பதினொன்றாம்திருமுறை, காரைக்கால் அம்மையார்,இயல்,இசை,நாடகம்,முத்தமிழ், ஆடல் வகைகள்

**முன்னுரை**

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்று வகுக்கப்பட்டு 'முத்தமிழ்' என்றும் 'மும்மைத்தமிழ்' என்றும் போற்றப்படும். முத்தமிழ் நூலான சிலப்பதிகாரத்தில் நூற் சிறப்புப் பாயிரத்தில் " *குடக்கோ முனிசேரன் தண்டாவுரை முத்தமிழ்* " என பெருமையுடன் வழங்கப்படுகிறது.பன்னிரு திருமுறைகள் என வழங்கப்பெறும் சைவ சமய பக்தி இலக்கியங்கள் 12 நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் காரைக்கால் அம்மையார் பாடல்கள் பதினொன்றாந் திருமுறையில் அமையப்பெற்றுள்ளன. பக்தி காலத்திற்கு காலத்தால் முற்பட்டவரும் இசை மற்றும் பாடல் வகைகளுக்கு முன்னோடியாக விளங்குபவர் காரைக்கால் அம்மையார் . காரைக்கால் அம்மையார் பாடல்களில் இயற்றமிழ், இசைத்தமிழ் மற்றும் நாடகத் தமிழின் தொன்மைகளை அறிந்து கொள்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின்நோக்கமாகும்.

**பன்னிருதிருமுறைகள்**

சைவ சமய பக்தி இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகள் என்று வழங்கப்படுகிறது. சிவபெருமானை முழுமுதற்கடவுளாக போற்றும் 12 நூல்களின் தொகுப்பாகும். இதில் முதல் மூன்று திருமுறைகள் ஞானசம்பந்தரின் கடைக் காப்பு என்ற பதிகங்களின் தொகுப்பு. நான்கு முதல் ஆறாம் திருமுறை வரையிலுமான மூன்று பகுதிகள் தேவாரம் என்று வழங்கப்பெறும்.இவை திருநாவுக்கரசர் அருளியவை. பதிகங்கள், குறுந்தொகை, திருவிருத்தம், திருத்தாண்டகம் போன்ற வகை பாடல் வகைகள் அமைந்துள்ளன. சுந்தரரின் திருப்பாட்டு என்று அழைக்கப்பெறும் பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் மற்றும் திருக்கோவையார் எட்டாம் திருமுறை யாகவும், ஒன்பதாம் திருமுறை ஒன்பதின்மர் இயற்றிய இசை பாடல்களின் தொகுப்பாகவும், திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக அமைந்துள்ளது. காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட பன்னிருவர் செய்த நூல்களின் தொகுப்பு பதினோராந் திருமுறை எனவும் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது.

**பதினொன்றாந் திருமுறை**

பதினோராந்திருமுறை பன்னிரு திருமுறையில் பதினோராவது தொகுப்பு நூலாக காணப்பெறுகிறது. இந்நூல் முழுவதும் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்த பிரபந்தங்கள் என்ற பாடல் வகைகளை சேர்ந்தவை. தொகுப்பு நூலாகவும் உள்ளது. சிவபெருமானைப் போற்றிப் பாடுவதாக அமைந்த

இப்பிரபந்த நூல்கள் அமைந்துள்ள பதினோராந் திருமுறை 'சைவ பிரபந்தமாலை' எனவும் 'சைவ பிரபந்தத்திரட்டு' என்றும் போற்றப்படுகிறது. இந்நூலில் காணப்படும் பிரபந்தங்கள் அந்தாதி, திருத்தொகை, பதிகம், சீட்டுக்கவி, மறம், மும்மணிக்கோவை, நான்மணிமாலை, உலா, கலம்பகம் போன்ற பிரபந்த வகையைச் சார்ந்தவை. இந்த திருமுறைகளை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. அவர் இயற்றிய பத்து பிரபந்த நூல்களையும் இணைத்து பதினோராம் திருமுறையில் மொத்தம் 40 நூல்கள் அமையப்பெற்றுள்ளது. சங்க இலக்கிய பாடல்களில் பொருளும் எண்ணிக்கையும் அமைந்து பெயர் பெற்ற கார் நாற்பது, இன்னா நாற்பது என்ற நூல்களை போல பதினோராந் திருமுறையில் திருஈங்கோய்மலை எழுபது, கார் எட்டு என்ற பெயரில் சில நூல்கள் அமைந்துள்ளது.

**பதினோராந்திருமுறையில் காரைக்காலம்மையார் பாடல்கள்**

பதினொன்றாந் திருமுறையில் காரைக்கால் அம்மையார் இயற்றிய நான்கு நூல்கள் இரண்டாம் தொகுப்பாக அமைந்துள்ளது. காரைக்கால் அம்மையார் அருளிய அற்புத அந்தாதி, இரட்டை மணிமாலை, மூத்த பதிகங்கள் இரண்டு என நான்கு நூல்கள் உள்ளன. காரைக்கால் அம்மையார் பாடல்களில் முதலாவதாக விளங்குவது 101 பாடல்கள் அடங்கிய அற்புதத் திருவந்தாதி. 20 பாடல்கள் கொண்ட திரு இரட்டை மணிமாலை மற்றும் 11 பாடல்கள் உள்ள இரு பதிகங்களின் 22 பாடல்கள் என இவர் பாடியது மொத்த எண்ணிக்கையில் 143 பாடல்களாகும். அற்புதத் திருவந்தாதியை தொடர்ந்து பாடியது இரட்டை

மணிமாலை என்பதை " *ஆய்ந்த சீரிரட்டை மாலை அந்தாதி யெடுத்துப்பாடி*" என்று சேக்கிழார் வாக்கில் அறியமுடிகிறது.கைலை சென்று வந்து அம்மையார் திருவாலங்காட்டில் அருளிய இரண்டு பதிகங்கள் திருவாலங்காட்டு மூத்த பதிகங்கள் என்று வழங்கப் பெறுகின்றது. பன்னிரு திருமுறைகளில் பெண்பால் புலவராக விளங்குபவர் இவர் ஒருவரே.

**காரைக்காலம்மையார் பாடல்களில் இயற்றமிழ் தொன்மைகள்**

முத்தமிழில் முதலாவதாக போற்றப்படுவது இயற்றமிழ் ஆகும். தமிழ்மொழியில் இலக்கணம் பொருந்திய, பொருள் பொதிந்த பாடல் வகைகள் ஆன செய்யுள்களும் உரைநடையும் இயற்றமிழ் நூல்கள் என்று வழங்கப் படுகிறது. கடந்த 19ஆம் நூற்றாண்டுவரை வரையிலும் உரைநடை குறைந்தும் செய்யுள் பாடல்களே இயற்றப்பட்டு வந்தன. ஆயினும் உரைநடை வழக்கமும் சங்க காலத்திலிருந்து இருந்து வந்துள்ளது. சிலப்பதிகாரம் '*உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்* ' என்பதனாலும், தொல்காப்பியத்தில் '*தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே* ' என்பதால் உரைநடை தொன்மையை நாம் அறியமுடிகிறது. ஆயினும் கடந்த 19 ஆம் நூற்றாண்டு வரையிலும் செய்யுள்களே சிறப்பாக விளங்கி வந்துள்ளன.

**அற்புதத்திருவந்தாதி**

அந்தாதி - அந்தம் + ஆதி என்றபடி நூலின் ஒவ்வொரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகியவற்றுள் ஏதாவது ஒன்று

அடுத்த பாடலின் முதலாவதாக வரும்படி, முடிவு முதல் பாடலின் தொடக்கமாக மாலை போல  மண்டலித்து பாடப்பெறும் யாப்பில் அமைந்தது அந்தாதி.  தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் சில பாடல் வரிகள் அந்தாதியாக இருப்பினும் காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, 101 பாடல்கள் கொண்டு அந்தாதி நூல்களில் காலத்தால் முந்தையது என்று போற்றப்படுகிறது.

**இரட்டைமணிமாலை**

அந்தாதி அடுத்து அருளியது இரட்டைமணிமாலை என்ற நூலாகும். இருவேறு வடிவங்களில் ஒரு பொருள் குறித்து பாடுவது இரட்டைமணிமாலை."*வெண்பா முதலாக கலித்துறை பின்வரும் இந்த இருபதிரட்டை மணிமாலை..* ". வெண்பாவும் கலித்துறை பாடல்களும் மாறி மாறி வர இருக்கும் பாடல்களை கொண்டு வருவதால் இப்பெயர் பெற்றுள்ளது என்று பன்னிருபாட்டியல், இரட்டை மணிமாலை இலக்கணம் கூறுகிறது. காரைக்கால் அம்மையார் கலித்துறை முதலிலும் வெண்பா அடுத்து வருவது போல் மாறுதலுடன் அமைத்துள்ளார். பிற்காலத்தில் இரட்டைமணி மாலை என்ற சிற்றிலக்கியத்திற்கு  முதல் நூலாக அமைந்து  வழிகாட்டியாக விளங்குகிறது.  கட்டளைக் கலித்துறை யாப்பில் சங்கப்பாடல்கள் இல்லை. தொல்காப்பியத்திலும் கலிப்பாவின் வகைகளைப் பற்றி கூறும் பொழுது இதை குறிப்பிடவில்லை என்பர். அம்மையாரின் பின்பற்றிய தேவார ஆசிரியர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் இந்த யாப்பை கையாண்டு இருப்பினும் அப்பாடல்கள்

'திருவிருத்தம்' என்றே அழைக்கப்படுகிறது. கலித்துறையில் முழுவதாக திருக்கோவையார் என்ற நூலைச் செய்தவர் மாணிக்கவாசகர்.

திருஇரட்டை மணிமாலை பிரபந்த பாடல்கள் அந்தாதி போலவே மண்டலத்து முடிகிறது. "*கிளர்ந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி ..சென்னி ஈசனுக்கே", "ஈசன் அவனல்லது இல்லை என நினைந்து கூசி மனத்தகத்து கொண்டிருந்து... பிறவாமை காக்கும் பிரான்", "பிரான் என்று தன்னப்பன்..* " என அற்புதத் திருவந்தாதி போலவே இரட்டை மணிமாலையும் அந்தாதி போலவே மண்டலத்து வருவதால், இயல் வழி சிறப்பு வாய்ந்தவையாக கருதப்படுகிறது. நீதிநூல் காலத்தில் தோன்றிய வெண்பா யாப்பு இங்கு பக்திப் பாடல்களாக காரைக்கால் அம்மையாரால் கையாளப்பட்டிருக்கிறது.

**பதிகங்கள்**

திருப்பதிகம் என்கின்ற செய்யுள் வகை 10 முதல் 11 பாடல்களை கொண்டதாக அமையும். திருப்பதிகம் என்று தேவாரப் பாடல்களை பெரும்பாலும் வழங்கி வந்தமையால் ஆசிரியருக்கு முன்னரே பதிகம் என்ற முறையில் பாடிய காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ள பதிகங்கள் மூத்த பதிகம் என்று அழைக்கப்படுகிறது. இவற்றை பின்பற்றி தேவார மூவர், ஆழ்வார்கள், மாணிக்கவாசகர் போன்றோர் பதிகங்களை இயற்றியுள்ளனர். பதிற்றுப்பத்து, திருக்குறள் போன்ற நூல்கள் பத்து பாடல்கள் கொண்டிருப்பினும், தெய்வத்தை போற்றிப் பாடும் வகையினால் திருப்பதிகம் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. பதிகம் பாடுவதிலும் காரைக்கால் அம்மையார் அவர்களே முன்னோடியாக

உள்ளார். மூத்த திருப்பதிகம் என்று அழைப்பது பதிகங்களின் தொன்மை பற்றி வந்தது இறைவனைப் பற்றி பாடிய பதிகங்களில் இறைவனின் சிறப்பு, வர்ணனை, புராணச் செய்திகள் வரும்படி அமைந்துள்ளதும் மேலும் பாடப்பெறும் தலத்தைப் பற்றிய குறிப்பு வரும்படியும், பாடுபவர் தம்முடைய பெயரினை முத்திரையாக வரும்படி அமைத்து பாடுவதிலும் இவரே வழிகாட்டியாக விளங்கியுள்ளார். " *கொங்கை திரங்கி நரம்பெழுந்து ....அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள் அப்பனிடம் திருவாலங்காடே*" என் பாடப்பெறும் தலத்தை தம் பதிக பாடல்களில் அமைத்து பாடியுள்ளார். முதல் மூத்த திருப்பதிகம் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகவும், இரண்டாம் பதிகம் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகவும் அமைந்துள்ளது.

**காரைக்கால் அம்மையார் பாடல்களில் இசைத் தமிழின் தொன்மைகள்**

அற்புதத்திருவந்தாதி மற்றும் இரண்டாவது மூத்த பதிகம், இந்தளம் என்ற பண்ணில் அமைத்துப் பாடியுள்ளார். திருப்பாட்டு என்னும் ஏழாம் திருமுறை பாடல்கள் இயற்றிய சுந்தரர் முதன் முதலாக தன் பதிகத்தில் பயன்படுத்திய பண் இந்தளம் ஆகும். இப்பண் தற்காலத்தில் மாயாமாளவகெளளை என்ற ராகமாக கொள்ளப்படுகிறது. மாயாமாளவகெளளை ராகத்திலேயே இன்றும் இசைப் பயிற்சி மேற் கொள்பவர்களின் அடிப்படை பயிற்சி பாடங்கள் உள்ளன. இரட்டை மணிமாலை, முதல் மூத்த பதிகம் ஆக இரண்டு நூல்களும் நட்டபாடை என்ற பண்ணில் பாடப்பெற்றுள்ளது. நட்டபாடை என்ற பண்ணிலேயே ஞானசம்பந்தரும் தம்முடைய முதல் பதிகமாக 'தோடுடைய செவியன்'

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியுள்ளார். இன்றும் நட்டபாடை பண்ணுக்கு பொருத்தமான கம்பீரநாட்டை என்ற ராகத்திலேயே தேவாரம், நாதஸ்வரம் மற்றும் கர்நாடக இசை நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் முதலாவதாக இசைக்கப்படும் ராகமாக விளங்குகிறது. ஒரு பதிகத்தினை இசையோடு பாடும் போது முதல் பாடல் இசை அமைப்பது போலவே மற்ற பதிகத்தின் பத்து பாடல்களையும் பாடுவது மரபு. பிற்காலத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பரிமாணம் பெற்ற கீர்த்தனை என்கின்ற பக்தி பாடல்களின் வடிவத்திற்கு பல சரணங்கள் ஒரே அமைப்பில் பாடுவதற்கு அடிப்படையாக காரைக்கால் அம்மையாரின் இசைப்பாடல்களை அமைந்துள்ளமையால் காரைக்கால் அம்மையார் இசைப்பாடல்களில் வடிவத்திற்கு முன்னோடியாகவும், கீர்த்தனை வழக்கத்திற்கு ஆதாரமாக விளங்கி உள்ளார் முதன் முதலில் பண் பொருந்திய இசை பாடல்களைப் பாடியவர் என்பதால் 'தென்னிந்திய இசையின் தாய்' என போற்றப்படுகிறார்.

**காரைக்கால் அம்மையார் பாடல்களில் ஏழிசை**

மூத்த திருப்பதிகத்தின் ஒன்பதாவது பாடலில் 7 நரம்புகளின் பெயர்களை தம்முடைய பாடலில் வரும்படி அமைத்துப் பாடியுள்ளார். கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி என்ற இந்த நரம்புகளின் அடிப்படையில் ஒன்றை ஒன்று முதலாகக் கொண்டு பல பண்கள் பிறக்கும் என்பதை "..*ஓசை பண் கெழுமப்பாடி*" என்று அதன் மூலம் அறியமுடிகிறது .

**காரைக்கால் அம்மையார் பாடல்களில் இசைக் கருவிகள்**

முதலாவது மூத்த திருப்பதிகத்தில் ஒன்பதாவது பாடலான " *சச்சரி*

*கொக்கரை தக்கை யோடு. .*" என்ற பாடலில் நான்கு வகையான இசைக் கருவிகளில் 12 கருவிகளை குறிப்பிடுகிறார். காற்றுக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோற்கருவிகள் மற்றும் கனகருவிகள் என்று நான்கு வகை கருவிகளான கொக்கரை, வீணை, குழல்,யாழ், சச்சரி, தக்கை, தகுணிச்சம், துந்துபி, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை பறை முழவு காலம் ஆகிய இசைக்கருவிகள் காணப்படுகிறது. இவற்றுள் தற்காலத்திலும் வழக்கிலிருக்கும் இசைக்கருவிகள் குழல், வீணை, மத்தளம், குடமுழா, மொந்தை, பறை, முழவு, தாளம் ஆகிய இசைக் கருவிகளின் தொன்மையை அறிந்து கொள்ள முடிகிறது.

**காரைக்கால் அம்மையார் பாடல்களில் நாடகத் தமிழ்**

காரைக்கால் அம்மையார் பாடல்களில் சிவபெருமானின் ஆடல்களான ஊர்த்துவ தாண்டவம், பாண்டரங்கம், கொடுகொட்டி மற்றும் துணங்கைக் கூத்து பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

**ஊர்த்துவ தாண்டவம்**

"..*மண்டலம் நின்று அங்கு உளாளமிட்டு, வாதித்து வீசி எடுத்தபாதம் அண்டமுற நிமிர்ந்தாடு மெங்கள் அப்பனிடம் திருஆலங்காடே* " எனவும் "*கழலொலி ஓசை சிலம்பொலிப்பக் காலுயர் வட்டணை இட்டு நட்டம்..*" என்று தம் பாடல்கள் மூலமாக ஊர்த்துவ தாண்டவத்த குறிப்பிடுகிறார். 'உள்ளாளம்' என்பது பஞ்சமரபு குறிக்கும் கால் கிரியை ஆகும். குஞ்சித்த காலை சுற்றி மேல் நோக்கி அணைய வைப்பது என்பதால் சிவபெருமான் கால் தூக்கி ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தை குறிக்கிறது. காலை உயர

தூக்கி வட்டணை என்பதனால் உயரத் தூக்கிய காலை சுழற்றி, சுழன்று ஆடும் ஊர்த்துவ தாண்டவத்தை போற்றிப் பாடியுள்ளார்.

**கொடுகொட்டி**

கொடுகொட்டி ஆடல் பற்றி சிலப்பதிகாரம் நடுநற்காதை பகுதியில் *"திருநிலைச்சேவடி.... மணிக்கழல் அவிழா துமையவள் ஒரு திறனாக வோங்கிய இமையவனாடிய கொட்டிச் சேதம்"* என்று கூறப்பட்டுள்ளது. திரிபுரம் எரித்த பின்னர் பலவித பறைகள் முழங்க ஆடிய கொடுகொட்டி ஆடலை,*"சச்சரி...வாசித்தத்தனை விர வினோடு ஆடுமெங்கள் அப்பனிடம் திருஆலங்காடே"* என காரைக்கால் அம்மையாரும் தம்முடைய பாடலில் குறிப்பிட்டுள்ளார். *"..கொடுகொட்டி குனித்து பாட உள்ளம் கவர்ந்திட்டு போவார் போல..."* என்று திருஞானசம்பந்தர் தம்முடைய திருவெண்காட்டு பதிகத்தில் காரைக்கால் அம்மையார் பாடிய பாடலைப் பின்பற்றியே பாடி உள்ளதை நாம் அறியலாம்..

**பாண்டரங்கம்**

திரிபுர சம்காரத் தாண்டவம் என்றும் வழங்கப்பெறும் பாண்டரங்கம் மிகப்பழமையான சிவபெருமானின் ஆடலாகும்.சுடுகாட்டையே அரங்கமாக கொண்டு ஆடிய ஆடல் வகை என்று கூறுவர். *"..பேய் தங்கி யலறி உலறு காட்டில் தாழ் சடை எட்டுத் திசையும் வீசி.."* என்றும் " *ஈமம் இடுசுடுகாட்டகத்தே ஆகம் குளிர்ந் தனல் ஆடும்", "..நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே"* என்று காரைக்கால் அம்மையார் பாடியுள்ளார். இந்த ஆடல் வகை திரிபுர சம்காரத் தாண்டவம் என்றும் வழங்கப் பெறுகிறது.

**காபாலம்**

சிவபெருமான் மண்டை ஓடுகளை அணிந்து ஆடுவது காபாலம் என்பது கலித்தொகை. *"..தலையங்கை கொண்டு நீ காபாலம் ஆடுங்கால்"* என்ற கலித்தொகை பாடல் வரிகள் விவரிக்கிறது. *"கொடும் வெண்டலையும் பிறையும் ததும்பக்... பரமன் ஆடுமே"* எனவும் " *முன்பாயின தலையோடுகள் கோத்தவை ஆர்த்து.."* என்ற பாடல்களில் சிவன் தலையோடுகளை அணிந்து ஆடுதல் கூறப்படுகிறது.

**துணங்கைக் கூத்து**

துணங்கைக் கூத்து வகைகளில் பேய்துணங்கை என்று ஒரு ஆடல் வகை அறியப்படுகிறது. *"முடக்கிய இருகை பழிப்புடையொற்றி துடக்கிய நடையது துணங்கையாகும்"* என்பது துணங்கைக் கூத்தின் விளக்கமாகும்."*சுழலும் அழல் வழிக் கொள்ளி வாய்ப் பேய் சூழ்ந்து துணங்கையிட் டோடி யாடி", "பேய்கள் கையடித்து ஓடு இடுகாட்டரங்கா", ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி ஒன்றினை ஒன்றடித் தொக்கவித்துப் பப்பின்னை யிட்டுப் பகன்டையாட"* என்ற காரைக்கால் அம்மையார் வாக்குகளால் துணைங்கைக் கூத்தினை அறியலாம். இக்கூத்தின் மற்றொரு பெயர் சிங்கி என்பதாகும்.

**அந்திநிருத்தம்**

சந்தியா தாண்டவம் என்றும் அந்தி நிருத்தம் அழைக்கப்படும். சந்தி என்பது மாலை வேளையை குறித்து வந்தது. அந்தி வேளையில் ஆடப்பெறும் ஆடல் வகை என்பதனால் இது சந்தியா தாண்டவம் அல்லது

பிரதோஷ தாண்டவம் என்றும் கூறுவர்." *ஆர்க்க அந்தியில் மாநட்டம் ஆடும் எங்கள் அப்பன் "* என்றும் *"முறைமை வழுவாமே அந்தி நிருத்தம் அனல் கை ஏந்தி அழகன் ஆடுமே"* என் விவரித்துள்ளார்.

**முடிவுரை**

சைவ சமய பக்தி இலக்கியங்களான பன்னிரு திருமுறையில் பதினோராந் திருமுறையில் காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் இரண்டாவது தொகுப்பாக அமைந்துள்ளது. இத்தொகுப்பில் காரைக்கால் அம்மையார் அருளிய நூல்கள் நான்கு. அவற்றுள் அந்தாதி, இரட்டை மணிமாலை, பதிகங்கள் என்று இயற்றமிழின் பல சிற்றிலக்கிய வகைகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார். தமிழிசை நரம்புகளின் பெயர்களையும் தம்முடைய பாடல்களை குறித்துள்ளார். இந்தளம், நட்ட சிலம்பார்க்க பாடை என்ற பழமையான பண்களில் அமைந்த இசை பாடல்களை தம்முடைய பாடல்களுக்கு பண் அமைத்து பாடியதன் மூலமாக இன்று வழக்கத்தில் இருக்கும் இசைக்கு அடிப்படையாக இவர் இசை பாடல்கள் அமைந்துள்ளன. முதல் முதலாக பதிகம் அமைப்பில் பாடுவதிலும், தலங்களை பாடுவதிலும், பாடல்களில் பலன் அறிவிப்பதிலும், தன் பெயரை முத்திரையாக அமைத்து பாடுவதிலும் முதன்மையானவர் என்பதால் இவர் 'தென்னிந்திய இசையின் தாய்' எனப் போற்றப்பெறும் பெருமை உடையவர். சிவபெருமானின் ஊர்த்துவ தாண்டவத்தை மிக சிறப்பான வர்ணனையுடன் உள்ளாளம் என்ற கால் கிரியை பிரயோகித்து ஆடுவது போன்ற செய்திகளும், திருவாலங்காடு என்ற தலத்தில்

அமைந்திருக்கும் நடராஜப்பெருமான் ஊர்த்துவ தாண்டவ கோலத்தில் அமைந்திருப்பதும் பொருத்தமாக உள்ளது. காபாலம், பாண்டரங்கம், கொடுகொட்டி போன்ற ஆடல் வகைகளையும் காரைக்கால் அம்மையார் குறிப்பிட்டுள்ளார். இதைத்தொடர்ந்து திருஞானசம்பந்தர் முதலானவர்களின் தேவாரப் பாடல்களிலும் இந்த ஆடல் வகைகளில் குறிப்புகள் சில காணப்படுகின்றன. அந்தி நிருத்தம், சந்தியா நிருத்தம் என்று அழைக்கக்கூடிய பிரதோஷ தாண்டவம் பற்றிய குறிப்புகளை இவர் விவரிக்கின்றார். சிவனின் நாட்டிய வகைகளின் வர்ணனைகளுக்கும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளார். பக்தி இலக்கியமான காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் மூலமாக இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் தொன்மைகளை அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**.

1. மோகன்,சுப்புலட்சுமி.செ. (2010). *காரைக்கால் அம்மையார் பாடல்கள்- ஓர் ஆய்வு*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

2. சிவா,கலைமணி.இரா.(2001). *காரைக்கால் அம்மையார் வாழ்வும் வாக்கும்*, புதுச்சேரி.

3. அங்கயற்கண்ணி,இ.(1994). *சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப் பாடல்கள்*, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

4. கந்தசாமி,சோ.ந.(1995). *திருமுறை இலக்கியம்* .உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

5. குலேந்திரன், ஞானாம்பிகை.(1996). *காரைக்கால் அம்மையார் தென்னிந்திய இசையின் தாய்*. தமிழ் வளர்ச்சித் துறை.

6.---(2016).*பதினொன்றாந்திருமுறை*-முதல்தொகுதி.கற்பகம் பல்கலைக்கழகம்.

7.---(2014). *பதினொன்றாந் திருமுறை*.தருமை ஆதீனம்.

8. முதலியார்,சம்பந்த.ப.(1933). *நாடகத் தமிழ்* .சென்னை இந்தியா அச்சுக்கூடம்.

9.---(1998).*பதினோராம் திருமுறை*.வர்த்தமானன் பதிப்பகம்.

10.சரணாலயத்தம்பிரான்,சம்பந்த.(1960).*சேக்கிழாரும் சேயிழையார்களும்.* ஸ்ரீசென்னமல்லீசுவரர் தேவஸ்தானம்.